**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே!**

**வணக்கம்.**

இம்மாமன்றத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தில் என் உரையை ஆற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கும் இம்மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளான பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புத்தாண்டில் நம் மாநிலத்தில் மகிழ்ச்சியும், வளமும், வளர்ச்சியும் மென்மேலும் பெருக என் உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. கடந்த 50 ஆண்டுகளாக, பல்வேறு துறைகளில் தமிழ்நாடு நமது நாட்டில் உள்ள மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. 1960களில், இந்தியாவின் மற்ற பெரிய மாநிலங்களோடு ஒப்பிடும்போது, சமூக, பொருளாதார, கல்வி, மருத்துவக் குறியீடுகளில் பின்தங்கி இருந்த தமிழ்நாடு, இன்று

அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக உயர்ந்து நிற்பதற்கு முழு முதற்காரணம், இக்காலகட்டத்தில் சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு இங்கு கட்டமைக்கப்பட்ட மிகச்சிறந்த ஆட்சிமுறையே. அனைவரையும் உள்ளடக்கிய இந்த வளர்ச்சிக் கோட்பாட்டின் விளைவாகவே, பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழு அண்மையில் மாநிலங்களின் வளர்ச்சி நிலை குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில் (Social Progress Index) 63.3 புள்ளிகளைப் பெற்று, இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோர், விளிம்பு நிலையில் உள்ளோர், பிற்படுத்தப்பட்டோர் போன்றோருக்கு அதிகாரமளித்து, அவர்களின் நலன் காத்துள்ள இந்த திராவிட வளர்ச்சிப் பாதையில் இந்த அரசு மேலும் உத்வேகத்தோடு தொடர்ந்து பீடுநடை போடும்.

3. இந்த வளர்ச்சிப் பயணத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயராத உழைப்போடும், அக்கறையோடும் இந்த அரசை வழிநடத்தி வந்துள்ளார்கள். இந்த வகையில், அண்மையில் 'இந்தியா டுடே' பத்திரிக்கை நடத்திய 'மாநிலங்களின் நிலை' என்ற ஆய்வு, சிறப்பாகச் செயல்படும் பெரிய மாநிலங்களில் முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்று முடிவு செய்துள்ளது. இந்தச் சாதனை, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமைக்கும், சமூகநீதியையும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட 'திராவிட மாடல்' ஆட்சிக்கும் அளிக்கப்பட்டுள்ள நற்சான்றிதழாகும்.

4. தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையை மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் விதமாக 2,429 கோடி ரூபாய் செலவில் 2.19 கோடி அரிசி அட்டைதாரர்கள் பயனடையும் வகையில், ஒவ்வோர் அரிசி அட்டைதாரருக்கும் ஆயிரம் ரூபாயும்,

ஒரு கிலோ பச்சரிசியும், ஒரு கிலோ சர்க்கரையும், ஒரு முழு செங்கரும்பும் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, இன்று அதனை தொடங்கி வைத்துள்ளார்கள். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் உவகையுடன் தமிழர் திருநாளைக் கொண்டாடிட இது பெரிதும் உதவும் என நான் நம்புகிறேன்.

5. மாண்டஸ் புயல், வடகிழக்குப் பருவமழையை அரசு சிறந்த முறையில் கையாண்டதால், சென்னை மாநகரில் அதன் தாக்கம் மிகக் குறைந்த அளவிலேயே இருந்தது. குறிப்பாக, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னரே, 261 கி.மீ. நீளமுள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் இதர வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்காக 1,335 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 209 கி.மீ. நீளமுள்ள கால்வாய்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும், கொசஸ்தலையாற்றில் 360 கி.மீ. நீளத்திற்கு மிக முக்கிய மழைநீர் கால்வாய்கள் போர்க்கால

அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கடந்த காலங்களில் அதிகளவில் மழை வெள்ள பாதிப்பிற்கு உள்ளான சென்னை மாநகரின் முக்கியமான பகுதிகள், இந்தப் பருவ மழைக்காலத்தில் மிகக் குறைந்த அளவிலேயே பாதிப்படைந்தன. மழை வெள்ளத்தின் காரணமாக ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலும் பெருமளவு குறைக்கப்பட்டு, மாநகரம் உடனடியாக இயல்பு நிலைக்குத் திரும்பியது. மாண்டஸ் புயலையும் வடகிழக்குப் பருவ மழையையும் மிகச் சிறப்பாகக் கையாண்ட இந்த அரசிற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. "**வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்**" என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கை நிலைப்பாட்டுடன் செயல்படும் இந்த அரசு, தமிழ்மொழியின் உரிமையைக் காக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

7. அலுவல்மொழிப் பயன்பாடு தொடர்பாக, தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளின் நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் முயற்சிகளுக்கு எதிராக ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அனைத்து மாநில மொழிகளையும் அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

8. மாநிலங்களின் வருவாய் பாதுகாக்கப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில், தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் தங்களது வரிவிதிக்கும் அதிகாரத்தை விட்டுக் கொடுத்து சரக்கு மற்றும் சேவை வரி முறையில் இணைந்தன. ஆனால், கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் வரிவளர்ச்சி வீழ்ச்சி அடைந்ததால், மாநிலங்களின் வருவாய் எதிர்பார்த்த அளவில் இல்லை. இந்நிலையில், 30.06.2022 ஆம் நாளுடன் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு வழங்கும் காலம் முடிவடைந்துள்ளது. கோவிட் பெருந்தொற்றின் தாக்கத்திலிருந்து மாநிலங்களின்

வருவாய் இன்னும் முழுமையாக மீளாத நிலையில், இழப்பீடு வழங்கும் காலத்தினை குறைந்தபட்சம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்காவது நீட்டிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை இந்த அரசு வலியுறுத்துகின்றது.

9. பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து நல்லாட்சியை வழங்கிட இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றது. நடப்பாண்டில், '**முதல்வரின் முகவரி**' திட்டத்தின் கீழ், இதுவரை பெறப்பட்டுள்ள 17.70 இலட்சம் மனுக்களில், 16.28 இலட்சத்திற்கும் மேலான மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த மனுக்கள் மீது திருப்திகரமான முறையில் தீர்வுகள் காணப்படுவதை உறுதி செய்திட, கண்காணிப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

10. உலகெங்கும் விரவியுள்ள தமிழர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தவும், தமிழ்ப் பண்பாட்டினைப் பேணிக்காக்கவும், '**தமிழ்ப் பரப்புரைக் கழகம்**'

உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், அயலகத் தமிழர்களுக்கும் தாய்த் தமிழ்நாட்டிற்கும் ஒரு பாலமாக இயங்குவதற்கும், அவர்களின் நலனைக் காப்பதற்கும் அயலகத் தமிழர் நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இம்முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஆண்டுதோறும் ஜனவரி 12 ஆம் நாள் '**அயலகத் தமிழர் தினமாக**' இந்த அரசால் அறிவிக்கப்பட்டு, கொண்டாடப்பட்டு வருகிறது.

11. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் 174 கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி, பால் பவுடர், உயிர்காக்கும் மருந்துகள் ஆகியவற்றை இந்த அரசு வழங்கியது. இக்கட்டான சூழலில் உதவிக்கரம் நீட்டிய தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கையை அனைவரும் பாராட்டியுள்ளனர். இக்காலகட்டத்தில், பொருளாதார நெருக்கடி காரணமாக 216 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்களை

முகாம்களில் தங்க வைத்து, தேவையான உணவு, உடை, அடிப்படை வசதிகள் போன்றவை வழங்கப்படுகின்றன.

12. மாநிலத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டிட இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கின்றது. வன்முறையில்லா ஒரு அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. நம் இளைய தலைமுறையின் எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்டு, போதைப் பொருட்களின் விநியோகத்தையும் பயன்பாட்டையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக உள்ளார். போதைப் பொருட்களின் கடத்தல் தடுப்புச் சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துதல், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

13. மக்களுக்கு சீராகவும் சிறப்பாகவும் சேவைகளை வழங்கும் எழில் கூடங்களாக பொது விநியோகக் கடைகளை மாற்றியமைத்திட, இந்த அரசு, '**நம்ம பகுதி நம்ம நியாய விலைக் கடை**' என்ற புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 4,455 பொது விநியோகக் கடைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

14. நீர்நிலைகளையும் கால்வாய்களையும் முன்கூட்டியே திட்டமிட்டுத் தூர்வாருவதில் முனைப்பான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டதாலும், நல்ல பருவமழை பெய்ததாலும், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை, உரிய காலத்திற்கு 19 நாட்கள் முன்னதாகவே திறக்கப்பட்டது. மேலும், உழவர்களுக்கு 61.12 கோடி ரூபாய் மதிப்பிலான குறுவைத் தொகுப்பை இந்த அரசு வழங்கியுள்ளது. இவை காரணமாக, காவிரி டெல்டா பகுதியில் 5.28 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை நெல் சாகுபடி செய்து வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டதோடு,

மாநிலத்தில் சம்பா சாகுபடி இதுவரை 36.20 இலட்சம் ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15. நுகர்வோர் பாதிக்கப்படாத வகையில், பசும்பால், எருமைப் பால் ஆகியவற்றின் கொள்முதல் விலையை லிட்டருக்கு மூன்று ரூபாய் உயர்த்தி அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் உள்ள 4.20 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

16. மீனவர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு, அவர்களின் நலனுக்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 5 புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கும் பணிகளும், 3 மீன்பிடித் துறைமுக மேம்பாட்டுப் பணிகளும் மொத்தம் 982.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரம்பரிய கடற்பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசு

உறுதியாக உள்ளது. இந்த ஆண்டில் மட்டும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 232 தமிழ்நாட்டு மீனவர்கள், இந்த அரசின் தீவிர முயற்சியால் மீட்கப்பட்டுள்ளனர். இன்று வரை, பத்து மீனவர்கள் இலங்கை அரசால் திருப்பி அனுப்பப்படவில்லை. 106 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இன்னும் உள்ளன. இலங்கைக் கடற்படையினர் நமது மீனவர்களை கைது செய்வதைத் தடுக்கவும், மீனவர்களின் உடைமைகளை விடுவிக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவும் இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

17. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தைத் தணிப்பதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. காலநிலை மாற்றம் குறித்து தகுந்த ஆலோசனைகளை வழங்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பன்னாட்டு வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று

அமைக்கப்பட்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முயற்சிகளை வலுப்படுத்த காலநிலை உச்சி மாநாட்டையும் சென்னையில் இந்த அரசு, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 8, 9 ஆம் தேதிகளில் வெற்றிகரமாக நடத்தியுள்ளது. ஒரு முன்னோடி முயற்சியாக, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பெருந்திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், 1,000 கோடி ரூபாய் மதிப்பில் '**பசுமை காலநிலை நிதியத்தை**' (Green Climate Fund) அரசு அமைத்துள்ளது.

18. மானிட நலன் மட்டுமன்றி, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் தமிழர் பண்பாட்டைப் பேணிக்காக்கும் இவ்வரசு, கழுவேலி, நஞ்சராயன் குளம் ஆகிய இடங்களில் பறவைகள் சரணாலயங்களையும், அகத்தியர் மலையில் யானைகள் காப்பகத்தையும் அமைக்க ஆணையிட்டுள்ளது. அதேபோல், இந்தியாவிலேயே முதல் முயற்சியாக, திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் தேவாங்கு காப்பகத்தையும், பாக் விரிகுடாவில் கடற்பசு

பாதுகாப்பகத்தையும் இந்த அரசு அமைத்துள்ளது. அழிவின் விளிம்பிலுள்ள மாநில விலங்கான நீலகிரி வரையாட்டைப் பாதுகாத்திட '**நீலகிரி வரையாடுத் திட்டத்தை**' 25.14 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்திட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. ஈரநில இயக்கத்தின் (Wetland Mission) கீழ், 13 புதிய ராம்சர் தளங்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்று நாட்டிலேயே முதல்நிலையை தமிழ்நாடு எட்டியுள்ளது.

19. அண்டை மாநிலங்களுடன் நட்புறவைப் பேணும் அதேவேளையில், மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளின் நீர்ப் பிரச்சினைகளில் நம் உரிமைகளைப் பாதுகாத்திட இந்த அரசு உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டின் உழவர் பெருமக்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மேகதாது அணை கட்டுவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு நீர் தேக்கப்பட்டுள்ளதோடு, அணையின்

உயரத்தை மேலும் உயர்த்த அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. பெண்ணையாற்றில் இருந்து கர்நாடக மாநிலம் அனுமதியின்றி தண்ணீரை திசை திருப்பும் பிரச்சினையில், மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி நதிநீர் தீர்ப்பாயத்தை விரைந்து அமைத்திட இந்த அரசு வலியுறுத்துகிறது.

20. மாநிலம் முழுவதும் நீர்ப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், 1,334.10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஆறு பெருந்திட்டங்களை இந்த அரசு விரைந்து செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக, 2.59 டி.எம்.சி அளவிற்கு கூடுதல் நீரைச் சேமிக்கவும் 6.92 டி.எம்.சி நீரை திரும்ப மீட்டெடுக்கவும் இயலும். அரசின் தொடர் கண்காணிப்பின் விளைவாக, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தாமிரபரணி - கருமேனியாறு – நம்பியாறு திட்டம் மற்றும் அத்திக்கடவு - அவிநாசி திட்டப்பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

21. நாட்டிலேயே பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது. குழந்தை இறப்பு விகிதம், தாய்மார்களின் இறப்பு விகிதத்தைப் பெருமளவில் குறைத்து, 2030 ஆம் ஆண்டில் எட்டப்பட வேண்டிய நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியுள்ளது.

22. அதிகரித்து வரும் தொற்று அல்லாத நோய்களின் பாதிப்பை போக்கும் வகையில், மக்களின் வீட்டிற்கே சென்று கட்டணமின்றி மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக '**மக்களைத் தேடி மருத்துவம்**' என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1.01 கோடி மக்கள் தங்கள் வீட்டிலேயே சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

23. தமிழ்நாட்டில் விபத்து நேர்ந்த முதல் 48 மணி நேரத்தில் அவசர மருத்துவச் சேவையை அனைவருக்கும் கட்டணமின்றி வழங்குவதற்காக,

நாட்டிலேயே முதன்முறையாக '**இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48**' என்ற உன்னதத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மாநிலமெங்கும் உள்ள 679 மருத்துவமனைகளில் இதுவரை 1.35 இலட்சம் விபத்துக்குள்ளானவர்களுக்கு 120.58 கோடி ரூபாய் மதிப்பிலான சிகிச்சைகள் எவ்விதக் கட்டணமுமின்றி வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம், எண்ணற்ற விலைமதிப்பில்லா உயிர்கள் காக்கப்பட்டுள்ளன.

24. அண்மையில், சில நாடுகளில் ஒமிக்ரானின் உருமாறிய ஒரு புதிய வகை வைரஸ் காரணமாக கோவிட் தொற்று வேகமாக பரவி வருகிறது. கோவிட் பெருந்தொற்றின் இரண்டாவது, மூன்றாவது அலைகளை வெற்றிகரமாக எதிர்கொண்ட இந்த அரசு, மாநிலத்தில் போதிய மருத்துவக் கட்டமைப்புகளைத் தயார் நிலையில் வைத்து, எதிர்வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ளத் தேவையான அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

25. நீட் தேர்வு முறையானது, கிராமப்புர ஏழை மாணவர்களை மிகவும் பாதிப்பதாகவும், மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதாகவும் அமைந்துள்ளது என்பதை கருத்தில் கொண்டு, இது குறித்து ஆய்வு செய்வதற்காக, நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு விலக்கு அளிப்பதற்கான சட்ட முன்வடிவை இந்த சட்டமன்றத்தில் நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்துள்ளோம். இச்சட்டம் குறித்து கோரப்பட்ட விளக்கங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த சட்ட முன்வடிவிற்கான ஒப்புதலை விரைந்து வழங்க இந்த அரசு வலியுறுத்துகிறது.

26. கோவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்ய, நாட்டிற்கே முன்னோடியாக,

மாபெரும் கற்றல் திட்டமான '**இல்லம் தேடிக் கல்வி**' திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இரண்டு இலட்சம் தன்னார்வலர்களின் உதவியுடன், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் 34 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஆராய்ச்சி நிறுவனமான J-PAL மேற்கொண்ட ஆய்வின்படி, ஆறு மாதங்களில் ஒட்டுமொத்த கற்றல் இழப்பில் 25 சதவீதம் வரை ஈடுசெய்யப்பட்டுள்ளதில், 'இல்லம் தேடி கல்வி' திட்டம் பெரும் பங்கை ஆற்றியுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை கூட்டங்களுடன் நடத்தப்பட்ட 'கல்வி மாற்றம் உச்சி மாநாட்டில்', இந்த ஆய்வின் முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு, அனைவராலும் பாராட்டப்பட்டதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 2025 ஆம் ஆண்டுக்குள், தொடக்கப் பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளும் புரிதலுடன் படிக்கவும், எண்கணிதத்தில்

திறன் பெறுவதற்கும் ‘**எண்ணும் எழுத்தும்**’ திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

27. அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதன் மூலம் ஒவ்வொரு மாணவரையும் முழுமையான வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் முக்கியக் குறிக்கோளாகும். இந்த நோக்கத்தை எய்திட, அடுத்த ஐந்தாண்டுகளில் அரசுப் பள்ளிகளை நவீனப்படுத்தி கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ‘**பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்**’ தொடங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 1,430 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 7,200 புதிய வகுப்பறைகள் 1,050 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

28. 45 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் சென்னை புத்தகக் கண்காட்சியை உலகத்தரத்திற்கு இவ்வாண்டு உயர்த்தும் வகையில், முதன்முறையாக சென்னை

பன்னாட்டு புத்தகக் கண்காட்சியை 16.01.2023 முதல் 18.01.2023 வரை நடத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதில் 25க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன. தமிழ் பதிப்பாளர்களுக்கும், உலகளாவிய பதிப்பகத் துறைக்கும் இடையே, அறிவுப் பரிமாற்றம், பதிப்புரிமை பரிமாற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதே இந்த புத்தகக் கண்காட்சியின் நோக்கமாகும். "**தாயெழில் தமிழை, எந்தன் தமிழரின் கவிதை தன்னை, ஆயிரம் மொழியிற் காணும் நாள் எந்நாளோ**" என்ற பாவேந்தரின் கனவை நனவாக்கும் வகையில், தமிழ் இலக்கியத்திலுள்ள சிறந்த படைப்புகளை உலக மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்க ஒரு சிறப்பு நல்கையை (special grant) தமிழ்நாடு அரசு வழங்கும்.

29. தரமான உயர்கல்வியை வழங்கி, நாட்டின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஆற்றல்மிக்க மனிதவளத்தை உருவாக்க இந்த அரசு முனைந்துள்ளது. அந்த வகையில், பெண்களின் உயர்கல்விக்கு வித்திடவே '**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்**

**நினைவு புதுமைப் பெண் திட்டம்**’ என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. நடப்புக் கல்வி ஆண்டில், இத்திட்டத்தின் மூலம், அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி பயிலும் 1,28,780 மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இந்நிதியாண்டின் இறுதிக்குள், பயன்பெறும் மாணவியரின் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் மேல் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, கடந்த ஆண்டைக் காட்டிலும், நடப்புக் கல்வியாண்டில், கல்லூரிகளில் அரசுப் பள்ளி மாணவியரின் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

30. தொழில்துறையின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் பெண்களுக்கு ஏற்ற பட்டயப் படிப்புகளையும் அரசு

தொடங்கியுள்ளது. கட்டடம், இயந்திரப் பொறியியல் போன்றவற்றில் பட்டயப் படிப்புகள் நடப்புக் கல்வியாண்டில் தமிழ்வழியில் கற்பிக்கப்படுகின்றன.

31. **நாட்டிலேயே முதன்முறையாக, பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட் போட்டியை இந்த அரசு வெற்றிகரமாக சென்னையில் நடத்தியது.** 180க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த, ஏறத்தாழ 1,800 விளையாட்டு வீரர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இப்போட்டியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இப்போட்டிக்காக, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய ஏற்பாடுகளை அனைவரும் வெகுவாகப் போற்றினர். உலகே வியக்கும் வகையில், மிகக் குறுகிய காலத்தில், இந்த பன்னாட்டுப் போட்டியைச் சிறப்பாக நடத்திக் காட்டிய தமிழ்நாடு அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

32. மாநிலம் முழுவதும் விளையாட்டுத் திறனை ஊக்குவித்திட ‘**முதலமைச்சர் கோப்பைக்கான**’

போட்டிகளை அரசு அறிவித்துள்ளது. இப்போட்டிகளில், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர், மாற்றுத்திறனாளிகள், அரசுப் பணியாளர்கள், பொதுமக்கள் என ஐந்து பிரிவுகளில், ஆண் பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், தடகளம், கால்பந்து, கபடி, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாநிலமெங்கும் நடத்தப்பட உள்ளன.

33. உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புதுமைத் திறன் உச்சிமாநாடு, **'UMAGINE'** முதன்முறையாக சென்னையில் வரும் மார்ச் மாதத்தில் நடைபெற உள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்பத் துறை முன்னோடிகள் ஆகியோரை ஒரே தளத்தில் ஒருங்கிணைத்து தொழில்நுட்பத் துறைக்கு புதிய உத்வேகத்தை இம்மாநாடு ஏற்படுத்தும்.

34. 1920 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட

மதிய உணவுத் திட்டம், பல்வேறு காலங்களில் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டு, நாட்டிற்கே முன்மாதிரியாக இன்று திகழ்கிறது. ஏழை எளிய மாணவர்கள் அதிக அளவில் பள்ளிகளில் சேர்வதற்கும், தொடர்ந்து பயில்வதற்கும் இத்திட்டம் பெரும் பங்காற்றியுள்ளது. இதன் அடுத்த பரிணாமமாக, கல்வி கற்கும் கனவுகள் பல சுமந்துகொண்டு, வெறும் வயிற்றுடன் காலையில் பள்ளிக்கு வரும் குழந்தைகள் கல்வியில் கவனம் செலுத்த இயலாத நிலையைக் களைய, '**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, 1.14 இலட்சம் மாணவர்கள் தினமும் பயன்பெறுகின்றனர். மதிய உணவுத் திட்டம் போன்றே இத்திட்டமும் நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

35. தமிழ்நாடு, பல்துறைகளில் தலைசிறந்து விளங்கவும், நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை

வளர்ந்த நாடுகளுக்கு நிகராக உயர்த்தவும், 2030 ஆம் ஆண்டிற்குள், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி இலக்கை அடைய வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலக்கிட்டுள்ளார்கள். இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பல முதலீட்டு மாநாடுகள், உலகளவில் முதலீடுகளை ஈர்க்க மேற்கொண்ட முன்னெடுப்புகள் ஆகியவற்றின் பயனாக, ஜூலை 2021 முதல் இன்றுவரை 207 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதனால், 2,23,210 கோடி ரூபாய் முதலீடும் 3,44,150 நபர்களுக்கான வேலைவாய்ப்புகளும் உறுதிசெய்யப்படும். இக்காலகட்டத்தில், 28,232 கோடி ரூபாய் அந்நிய முதலீட்டை தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

36. தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி, தோல்பொருட்கள் கொள்கை, தமிழ்நாடு விண்வெளி பாதுகாப்புத் தொழில்

கொள்கை போன்ற பல துறைசார் கொள்கைகள் 2022 ஆம் ஆண்டில் இந்த அரசால் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், எரிபொருட்களில் எத்தனால் சேர்த்தல், பசுமை ஹைட்ரஜன், மின் வாகனங்களுக்கான கொள்கைகள் ஆகியவை மிக விரைவில் வெளியிடப்படும்.

37. சென்னை தவிர பிற நகரங்களிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்திட உகந்த சூழலை உருவாக்க, ஏழு இடங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தின் மூன்றாவது டைடல் பூங்கா மதுரையில் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

38. காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் ஒரு புதிய பன்னாட்டு விமான நிலையத்தை அமைப்பதற்கான ஆயத்தப் பணிகளை மாநில அரசு தொடங்கியுள்ளது. இது நமது மாநிலத்தின் அதிகரித்து வரும் விமானப் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதோடு,

அப்பகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலும்.

39. கோவிட் பெருந்தொற்றால் கடும் பாதிப்பிற்குள்ளான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளால் பெருமளவில் மீண்டு வந்துள்ளன. இந்நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் இந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்கள் 20 சதவீதமும், கடன் கணக்குகளின் எண்ணிக்கை 19 சதவீதமும் உயர்ந்துள்ளன. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், 2,344 கோடி ரூபாய் மதிப்புள்ள, 16,000 க்கும் மேற்பட்ட சுயதொழில் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, நடப்பு ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கென ஐந்து புதிய தொழிற்பேட்டைகளையும் அரசு தொடங்கியுள்ளது.

40. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் (StartupTN) வாயிலாக மாநிலத்தில்

உள்ள புத்தொழில்களுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. மே 2021 முதல் மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்ட புத்தொழில்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. மேலும், நம் நாட்டிலேயே முதன்முறையாக **பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினரின் புத்தொழில்களுக்கு உதவ, 30 கோடி ரூபாய் சிறப்பு நிதி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.** இதனால், அனைவரையும் உள்ளடக்கிய புத்தொழில் சூழல் மாநிலத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

41. தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகத்தரம் வாய்ந்த திறன் பயிற்சி பெற்று திறமையிலும், தகுதியிலும், சிறந்து விளங்கிட '**நான் முதல்வன்**' திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. கற்கும் கல்விக்கும், தொழில்துறைகளின் தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியை நிறைவு செய்து, வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தரக்கூடிய திறன் பயிற்சிகளும் தொழில்சார்ந்த பயிற்சிகளும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இத்தகைய சீரிய முன்னெடுப்புகளின் மூலம், 3 இலட்சம் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், 4.5 இலட்சம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களும் இதன் மூலம் பயனடைவர். கல்லூரிப் படிப்பு முடியும் தருவாயிலேயே மாணவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பினை உறுதி செய்வதோடு, தொழில் நிறுவனங்களில் பணியாற்ற, திறன்மிகு மாணவர்களை உருவாக்குவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

42. கிராமப்புறப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, கட்டமைப்புகளை மேம்படுத்தி, வாழ்வாதாரத் திட்டங்களின் மூலம் வறுமையை அகற்றிடும் முயற்சிகளில் இந்த அரசு முழுமையாக ஈடுபட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமப்புரக் குடியிருப்புப் பகுதிகளிலும் சமமான முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்யும் நோக்கத்துடன், ‘**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**’ இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2022-23 ஆம்

ஆண்டில் மொத்தம் 1,155 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,544 ஊராட்சிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

43. மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் சகோதர உணர்வுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட '**பெரியார் நினைவு சமத்துவபுரம்**' திட்டத்தை இந்த அரசு மீட்டெடுத்து வருகின்றது. முதற்கட்டமாக, 149 சமத்துவபுரங்களில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொண்ட புதுப்பிக்கும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

44. அதேபோல், நகர்ப்புரப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, வரும் நான்கு ஆண்டுகளில் 20,990 கி.மீ. நீளமுள்ள நகர்ப்புர சாலைகள் 9,588 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படுமென சென்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்பணிகள் விரைவில்

முடிக்கப்படும். 53 இடங்களில் தேங்கியுள்ள பழைய கழிவுகளை (legacy waste) சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு, உயிரி-அகழ்ந்தெடுத்தல் (Bio-mining) முறையில் அப்புறப்படுத்தி, நிலங்கள் மீட்டெடுக்கப்படவுள்ளன. இதற்காக, அரசு 122 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை, 369 ஏக்கர் நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டு, பசுமையான பகுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. மக்களின் குடிநீர் தேவைகளை நிறைவு செய்வதற்காக, 15,734 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 103 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு, உயிர்நீர் இயக்கத்தின் கீழ் (Jal Jeevan Mission) அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், நகர்ப்புரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகளுக்காக அம்ருத் திட்டத்தின் கீழ் 3,166 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மாநிலம் முழுவதும் 1.64 கோடி மக்கள் பயன்பெறுவார்கள்.

45. நகரங்களின் திட்டமிட்ட வளர்ச்சியை உறுதி செய்யவும் முறைப்படுத்தவும் ஆறு புதிய நகர வளர்ச்சிக்

குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இப்பெரும் நகரத் தொகுப்பின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் வகையில், சென்னைப் பெருநகரின் எல்லை ஐந்து மடங்காக 5,904 சதுர கி.மீ. அளவிற்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

46. சென்னைப் பெருநகரப் பகுதிக்கான போக்குவரத்துத் திட்டங்களைத் தயாரிக்கவும், பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் போக்குவரத்து அமைப்புகளையும், சேவைகளையும் ஒருங்கிணைத்திடவும், சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) 2010 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பல ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த இக்குழுமத்திற்கு, இந்த அரசு புத்துயிர் அளித்துள்ளது. கடந்த நவம்பர் மாதத்தில் இக்குழுமத்தின் முதல் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஒருங்கிணைந்த பயணச்சீட்டு முறை, பல்வழிப் போக்குவரத்துத் திட்டம், பெண்களுக்கும், மாணவர்களுக்கும் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

47. சென்னை பெருநகரின் வேகமான வளர்ச்சி நீடித்து நிலைக்கத்தக்கதாக இருக்க வேண்டுமெனில், இந்தப் பெருநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் திட்டமிட்ட வளர்ச்சி அவசியம் என்பதை இந்த அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. இந்த வகையில், சென்னைக்கு அருகே உள்ள மாடம்பாக்கத்தில் 600 ஏக்கர் பரப்பளவில், நிலத்திரட்டு (Land Pooling) முறையில் புதிய வளர்ச்சிப் பகுதியை உருவாக்குவதற்கான ஒரு முன்னோடி முயற்சி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நில உரிமையாளர்களின் ஒப்புதலோடு நிலங்களைப் பெற்றுத் திரட்டி, திட்டமிட்ட வளர்ச்சிக்கு ஏதுவாக பல்வேறு நிலப் பயன்பாடுகளுக்கு ஏற்றவாறு அவற்றை நில வகைப்பாடு செய்து, நில உரிமையாளர்களுக்கு

பங்கீடு செய்து வழங்கி, புறநகர் வளர்ச்சிக்கு வித்திடும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. பெரும்பாலான நில உரிமையாளர்கள் மனமுவந்து ஒப்புதல் அளித்துள்ள இப்பணிகள் விரைவில் நிறைவுறும். இதன் அடுத்தகட்டமாக, இதே நிலத்திரட்டு முறையைப் பின்பற்றி, **கிழக்கு கடற்கரைச் சாலையை ஒட்டி, மாமல்லபுரம் அருகே புதிய துணை நகரம் ஒன்று அமைக்கப்படும்.** இச்சாலையும் நான்குவழிச் சாலையாகத் தரம் உயர்த்தப்படுவதால், சென்னை பெருநகரப் பகுதியின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அச்சாணியாக இத்திட்டம் விளங்கும்.

48. பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத, தரமான, பாதுகாப்பான சாலை இணைப்புகளை மாநிலம் முழுவதும் அமைத்திட இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 5,582 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,263 புதிய பணிகளை மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும்,

560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 131 தரைப்பாலங்களை உயர்மட்ட மேம்பாலங்களாக மாற்றுதல், 142 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புறவழிச்சாலைகள் அமைத்தல், 327 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கும் புதிய பணிகள் போன்றவை நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

49. வாழ்வாதார மேம்பாடு, திறன் வளர்ச்சி, சுயசார்பு வாயிலாக, மகளிரின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாக சுய உதவிக் குழுக்கள் திகழ்கின்றன. இவ்வாண்டில், 3.97 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு, 42,845 புதிய சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில், இதுவரை 3.07 இலட்சம் சுயஉதவிக் குழுக்களுக்கு 16,949 கோடி ரூபாய் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. சுயஉதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் தரத்தை மேம்படுத்தி, மின் வணிக தளங்களின் வாயிலாக விற்பனை

வாய்ப்புகளை உயர்த்திட, 'மதி' என்ற முத்திரை (brand) அரசால் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

50. சாதாரண நகரப் பேருந்துகளில் '**மகளிர் அனைவருக்கும் கட்டணமில்லாப் பயணம்**' என்ற புரட்சிகரமான திட்டத்தின் மூலம், மாநிலத்தில் பெண்களிடையே பொருளாதார மேம்பாடு மட்டுமன்றி சமூக எழுச்சியும் ஏற்பட்டுள்ளது. நாள்தோறும் 36 இலட்சம் பயணங்கள் செய்து மகளிர் பயனடைந்து வரும் இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பெண்ணும் சராசரியாக மாதத்திற்கு 888 ரூபாய் அளவிற்கு சேமிக்கின்றனர் என்று மாநில திட்டக்குழுவின் ஆய்வு தெரிவித்துள்ளது.

51. தற்போதுள்ள பழைய பேருந்துகளை மாற்றி சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய பசுமைப் பேருந்துகளை அறிமுகப்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது. 2,213 BS-VI பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் KfW நிதியிலும், 1,000 BS-VI பேருந்துகள் மாநில அரசு

நிதியுதவியிலும் கொள்முதல் செய்யப்பட்டு, இவ்வாண்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

52. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் அமைக்கப்பட்ட 54 கி.மீ. நீளமுள்ள 2 வழித்தடங்களில், உலகத்தரம் வாய்ந்த சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கோவிட் பெருந்தொற்றிற்குப் பின், நாள்தோறும் பயணிக்கும் நபர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. 2022 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் நாள் ஒன்றிற்கு 1.76 இலட்சம் பயணிகள் என்று இருந்த எண்ணிக்கை, டிசம்பர் மாதத்தில் 2.07 இலட்சமாக உயர்ந்துள்ளது. 63,246 கோடி ரூபாய் மதிப்பில் 118.9 கி.மீ. நீளமுள்ள சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

53. மாநிலத்தில் குவிந்துகிடக்கும் சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தி, சுற்றுலா

சார்ந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையை அரசு பின்பற்றுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு தனித்துவமான அனுபவங்களை ஏற்படுத்தவும், உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களில் சாகசச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

54. ஒப்பாரும் மிக்காரும் இல்லா தமிழ் மாமன்னர் இராசராச சோழனின் அரும்பெருமைகளைப் போற்றும் நோக்குடன் அவரது பிறந்தநாளான ‘சதயவிழா’ இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அரசு அறிவித்துள்ளது. மேலும், சோழப் பேரரசின் புகழைக் காட்சிப்படுத்தும் வகையில் இராசராச சோழனின் மணிமண்டபம் புதுப்பிக்கப்பட்டு மெருகேற்றப்படும் எனவும், உலகாண்ட தமிழ் மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடி திருவாதிரை இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும்

எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

55. மாநிலத்தில் உள்ள தொல்பொருள் மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்களின் செழுமையான மரபினைப் பாதுகாப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கீழடி அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக அமைக்கப்படும் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. இதுபோன்றே, ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான '**பொருநை அருங்காட்சியகம்**' அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

56. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து கோவில் நிலங்களையும், உடைமைகளையும்

பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. **இதுவரையில் 3,657 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களும், சொத்துகளும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.** மகத்தான இப்பணிகளுக்காக தமிழ்நாடு அரசிற்கு என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு, 158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 34 கோவில்களின் புதிய கட்டுமானப் பணிகளை அரசு தொடங்கியுள்ளது. மேலும், திருச்செந்தூர் திருக்கோவில் பகுதியில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

57. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கொள்கையுடன் செயல்படும் இந்த அரசு, சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள அடித்தட்டு மக்கள் அனைவரும் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டினை அடைவதற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடங்கள், திறன்மிகு வகுப்பறைகள் அமைத்தல், உண்டு உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் 425.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

58. மாநிலம் முழுவதும் வீடின்றி வசித்துவரும் அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியினருக்கு 1,537 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வனங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களின் உரிமைகளை உறுதிசெய்யும் பொருட்டு, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் வன உரிமைச் சட்டம் 2006 ன் கீழ் 2,293 பழங்குடியின குடும்பங்களுக்கு வன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

59. தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநாட்டி, சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களின் முன்னேற்றத்தினை உறுதி செய்யும் வகையில், சிறப்பான இட ஒதுக்கீட்டு முறையை தமிழ்நாடு அரசு

பின்பற்றி வருகிறது. பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினருக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவது சமூகநீதிக் கொள்கைக்கு எதிராக உள்ளதால், தற்போது நமது மாநிலத்தில் பின்பற்றப்படும் இடஒதுக்கீட்டு முறையே தொடரும் என்ற கொள்கைக் கோட்பாட்டில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

60. சமூகத்தில் பின்தங்கியுள்ளோரின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்ய, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம், 210 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

61. கண்ணை இமை காப்பது போல் சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. ஹஜ் மற்றும் ஜெருசலேமிற்கு

புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

62. சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரின் நிலையை மேம்படுத்துவதை இந்த அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. **மாற்றுத் திறனாளிகள் பெறும் மாதாந்திர ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும், தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித்தொகையை 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும் உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு வழங்கப்பட்டு வருகிறது.** இதற்காக, ஆண்டொன்றிற்கு 388 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதனால் மாநிலம் முழுவதும் உள்ள 6.45 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுவார்கள்.

63. அரசுப் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, சுமார் 16 இலட்சம் அரசு

அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில், இந்த அரசு 01.01.2023 முதல் அகவிலைப்படியை 34 சதவீதத்திலிருந்து 38 சதவீதமாக உயர்த்தி வழங்கியுள்ளது. இதனால் ஆண்டொன்றிற்கு அரசிற்கு 2,359 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். ஓய்வூதியர்களுக்கான வாழ்நாள் சான்றிதழ் வழங்கும் முறை மின்னணு முறையில் எளிமையாக்கப்பட்டு, ஓய்வூதியதாரர்கள் இருக்கும் இடத்திலிருந்தே இச்சேவையைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

64. இந்த அரசு பதவியேற்ற பின் …

- 2021 ஆம் ஆண்டில், நம் மாநிலத்தில் மழைவெள்ளத்தால் சேதம் ஏற்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அந்தப் பேரிடரை எதிர்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில், **சமீபத்தில்**

**ஏற்பட்ட புயலையும், கனமழையையும் இந்த அரசு மிகச் சிறப்பாகக் கையாண்டது.**

- கோவிட் பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாநிலத்தின் பொருளாதாரம் தேக்க நிலையை அடைந்திருந்தது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில், இந்த அரசு மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தங்களாலும், நலத்திட்டங்களாலும், வளர்ச்சிப் பணிகளாலும், இந்நிலை மாறி, **தற்போது தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்கிறது.**

- சட்டம் ஒழுங்கை சிறப்பாக நிலைநாட்டுவதால், தமிழ்நாடு தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. இதனால், **பன்னாட்டு முதலீடுகளை ஈர்த்து, அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.**

65. சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை,

மதநல்லிணக்கம், பல்லுயிர் ஓம்புதல் ஆகிய கொள்கைகள் இவ்வரசின் அடித்தளமாக அமைந்துள்ளன. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி, பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சியை இந்த அரசு வழங்கி வருகின்றது.

66. தமிழர்களின் நலன், தமிழ்நாட்டின் வளம் ஆகியவற்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இவ்வரசு அயராது உழைத்து வருகின்றது. எத்தனை இடர்பாடுகள் இந்த இலட்சியப் பாதையில் எதிர்நின்றாலும், அவற்றையெல்லாம் கடந்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக இந்த அரசு தொடர்ந்து, வழிநடத்திச் செல்கிறது. இவ்வாண்டில், மக்கள் நலனுக்காகவும், மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காகவும், உரிய சட்டங்களை இயற்றி, சட்டமன்ற விவாதங்களில் தங்களது அரிய

கருத்துகளை வழங்கி, இந்த அரசின் செயல்பாட்டிற்கு நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

67. அனைவருக்கும் மீண்டும் எனது புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகாகவி பாரதியாரின் வைர வரிகளுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**வாழிய செந்தமிழ்!**

**வாழ்க நற்றமிழர்!**

**வாழிய பாரத மணித்திரு நாடு!**